(3) ஒற்றிவைப்புத் தீர்மானம்

(அ) மைசூர் மாநில அரசு ஹேமாவதி, சொர்ணமுகி ஆறுகளில் அணை கட்ட இருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில் மைசூர் மாநில அரசு ஹேமாவதி, சொர்ணமுகி ஆகிய ஆறுகளில் அணைகள் கட்டவேண்டுமென்று இருப்பது குறித்து விவாதிக்க வேண்டுமென்பதால் இந்த அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

இரு மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்து பேசி அதற்கு முடிவெடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாலும், இதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீது தங்களுடைய கருத்துக்களைக் கூறுகின்ற வாய்ப்பு இருப்பதாலும் நான் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) மைசூர் மாநிலத்தில் மதுரையிலிருந்து சென்ற தமிழ்நாட்டு மக்களைத் துன்புறுத்தப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. சித்தன் அவர்களும், மைசூர் மாநிலத்தில் மதுரையிலே இருந்து சென்ற தமிழ் நாட்டு மக்களை ஜனவரி 31-ம் நாளன்று அடித்துத் துன்புறுத்தியதுபற்றிய நிகழ்ச்சிபற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமெனக் கோரி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

அதைப்பற்றி நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் அந்த மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, அதற்கு அந்த மாநில முதலமைச்சர் அவர்கள் போதிய பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்று பதில் எழுதியிருக்கின்ற காரணத்தினாலும், மேலும் இதுகுறித்துக் கூறவேண்டுமானால் நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற இருக்கின்ற விவாதத்தின்போது பேசுவதற்கு அவர்களுக்குப் போதுமான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலும் நான் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(4) கவன ஈர்ப்பு

தஞ்சை மாவட்டத்தைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உணவு தானியக் கட்டுப்பாட்டை நீக்கியதால் ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி தஞ்சை உழவர்கள் அச்சம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 41-வது விதியின்கீழ் மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடி பொது முக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றைக் கொண்டுவருவார்கள்.